முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 04.06.2025

O.S. 203/2021

வா.சா.1 - சாந்தி

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் எம்.ஏ பட்டப்படிப்பை தொலைதூரக்கல்வி மூலமாக படித்தேன். தமிழ் இளங்கலைபட்டப்படிப்பை அதற்கு முன்பாக படித்தேன். இளங்கலைபடிப்பை முடித்து ஒரு வருடம் இடைவெளியில் எம்.ஏ படித்தேன். வழக்குச்சொத்திற்கு வடக்கே அக்கினி சுடலைமாடசுவாமி கோவில் உள்ளது. அந்தக்கோவிலில் வாரந்தோறும் பூஜை நடத்தப்படும். வருடந்தோறும் தை மாதம் கொடை நடத்துவார்கள். அந்தக்கோவில் எங்களது குடும்பக்கோவில் என்றால் சரிதான். வருடத்திற்கு அந்த கோவிலுக்கு எத்தனை முறை போவேன் என்றால் எனக்கு முடிந்தால் செல்வேன் எவ்வித கட்டாயமும் எனக்கு கிடையாது. அந்தக்கோவிலில் எனக்கு உரிமை உண்டா என்றால் உரிமை என்றால் என்ன என்று சாட்சி கேட்கிறார். 2016 ம் வருடத்தில் நான் அந்தக்கோவிலுக்கு கோவில் கொடைக்கு சென்றேனா என்றால் எனக்கு நியாபகம் இல்லை அப்போது நான் சென்னையில் இருந்தேன். 2017 ம் ஆண்டு அந்தக்கோவிலுக்கு போனேனா என்றால் நியாபகம் இல்லை. 2018, 2019, 2020 ஆகிய வருடங்களில் எத்தனை முறை கோவிலுக்கு சென்றேன் என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது ஆனால் சென்றேன். அவ்வாறு நான் கோவிலுக்கு சென்றபோது வழக்குச்சொத்தில் எனக்கு உரிமை உள்ளது என்றும் 4 ம் பிரதிவாதி காலி செய்ய வேண்டும் என்று 4 ம் பிரதிவாதியிடம் கேட்டேனா என்றால் நான் எனது அம்மாவிடம் கேட்டேன் 4 ம் பிரதிவாதியிடம் நான் நேரடியாக கேட்கவில்லை. எனக்கு தராமல் சொத்தை விற்றதாக எனது அம்மாவிடம் 2018 ம் வருடத்தில் எந்த மாதத்தில் கேட்டேன் என்றால் 2018 ல் நான் கேட்கவில்லை 2021 ல் தான் நான் கேட்டேன்.

2018 ல் நான் 4 ம் பிரதிவாதி அந்த சொத்தில் காலி செய்ய கோரி ஏன் கேட்கவில்லை என்றால் எனது அம்மா எனது அக்காவிற்கு ஆதரவாக இருந்ததால் நான் நேரடியாக 4 ம் பிரதிவாதியிடம் கேட்கவில்லை. எனது அம்மாவின் மூலம் 4 ம் பிரதிவாதியிடம் வழக்குச்சொத்தை காலி செய்ய சொல்லி 2018 ம் ஆண்டு எந்த மாதம் கேட்டேன் என்றால் நியாபகம் இல்லை 2018 ம் ஆண்டு நான் கேட்டேன். 4 ம் பிரதிவாதி மீனா எனது குடும்ப உறுப்பினர் இல்லை என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதி மீனாவை எதற்காக வழக்கில் கட்சி சேர்த்தேன் என்றால் வழக்குச்சொத்தை காலி செய்ய முடியாது என்று எனது அம்மாவிடம் 4 ம் பிரதிவாதி சொன்னதால் அவரை சேர்த்தேன். 4 ம் பிரதிவாதி ஏன் காலி செய்ய முடியாது என்று சொன்னார் என்றால் எனது அம்மா கையொப்பம் செய்து கொடுத்துவிட்டதால் காலி செய்ய முடியாது என்று கூறினார். வழக்குப்பட்டிகை சொத்திற்கு கிரையம், பட்டா, சிட்டா ஆகியவை 4 ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். வழக்குப்பட்டிகை சொத்தின் சந்தை மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. வழக்குச்சொத்தில் 4 ம் பிரதிவாதி மீனா ரூ.2,00,000/- செலவு செய்து போர் போட்டுள்ளார் என்றால் இல்லை அது ஏற்கனவே உள்ளது. வழக்குப்பட்டிகை சொத்தில் போர் உள்ளதா நான் பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. சாட்சி தற்போது பிராதை படித்து பார்த்தும் எனக்கு தெரியாது என்று கூறுகிறார். வழக்குச்சொத்தில் எனது குடும்ப உறுப்பினர்கள் யாரும் போர் போடவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் போரை பற்றி பிராது வழக்குச்சொத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல எனக்கு குறிப்பிட வேண்டும் என்று தெரியாது. வழக்குச்சொத்தில் உள்ள வீடு எவ்வளவு மதிப்பு என்றால் எனக்கு தெரியாது. வழக்குச்சொத்தில் உள்ள வீடு மட்டும் தற்போது ரூ.5,00,000/- க்கு அதிகமாக பெருமானம் உள்ளது என்றால் எனக்கு உள்ளது. பழைய ஓட்டு வீடு பின்புறம் கான்கிரீட் கட்டிடம்

கட்டியுள்ளார்கள் அதன் மதிப்பு எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2 முதல் 5 வரையிலான ஆவணங்களில் உள்ள சொத்துக்களில் எந்த உரிமையும் நான் கோரவில்லை என்றால் சரிதான் அந்த சொத்துக்களுக்கு எனக்கு பாகம் கொடுத்து முடித்துவிட்டார்கள் அதனால் நான் கோரவில்லை. பி.வா.சா.ஆ.2 முதல் 5 வரையிலான ஆவணங்களில் நான் கட்சி கிடையாது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் உள்ள சொத்துக்களில் எனக்கு பாகம் கொடுத்ததாக சொல்வதற்கு எந்தவிதமான ஆவணமும் நான பிராதுடன் தாக்கல் செய்யவில்லை என்றாலும் மேற்படி விவரங்களை நான் பிராதில் சொல்லவில்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ-1 ஆகிய ஆவணங்களில் உள்ள சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் இல்லாததால்தான் பி.வா.சா.ஆ.2 முதல் 5 மற்றும் வா.சா.ஆ-4 ஆவணங்களில் உள்ள சொத்துக்களில் என்னை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல சொத்துக்கள் அனைத்தும் தாத்தாவின் உடையது. அப்பா இறந்தபோது நாங்கள் இளவர்களாக இருந்ததால் எனது அம்மா பெயரிலேயே சொத்துக்கள் அனைத்தையும் எனது சித்தப்பா தயார் செய்து வைத்திருந்தார். மேற்படி ஆவணங்கள் 2006 ம் ஆண்டு தயார் செய்தபோது நான் ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை என்றால் என்னிடம் சொன்னார்கள் அப்போது எனக்கு திருமணம் ஆகவில்லை என்பதால் ஆட்சேபனை செய்யவில்லை. தெங்கம்புதூர் வில்லேஜ் புதிய புல எண்.325/2 ல் உள்ள 4 செண்ட் 270 சதுர லிங்ஸ் மனையும் மேற்படி கிராமம் புதிய புல எண்.327/1 ல் உள்ள 9 செண்ட் 410 சதுர லிங்ஸ் மனையும் தற்போது எனது தாயாரான 1ம் பிரதிவாதி தனிப்பட்ட அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் எனது தாத்தாவின் பெயரில் இருந்து எனது அம்மாவின் பெயருக்கு மாற்றப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இரண்டு சொத்துக்களை குறித்து நான் பாகம் எதுவும் கேட்டேனா என்றால் இல்லை பிறகு

பார்த்துக்கொள்ளலாம் என்று எண்ணியிருந்தேன். மேற்படி சொத்துக்களும் பாகப்பத்திரம் மூலம் எனது தாயாருக்கு கிடைத்த சொத்துக்கள் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமானது புல எண்.325/2 ல் வில்லங்கச் சான்றிதழ் என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.7 ஆகும்.** தற்போது என்னிடம் காட்டப்படும் தெங்கம்புதுார் புல எண்.327/1 ல் வில்லங்கச் சான்றிதழ் என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.8 ஆகும்.** 4 ம் பிரதிவாதி வழக்குச்சொத்தை கிரையம் வாங்கியதிலிருந்து அந்த சொத்தின் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரிதான். வழக்குச்சொத்தினை 4 ம் பிரதிவாதி தனித்து அனுபவித்து வருவதால் நான் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல பணத்தை சிறிய தொகையை எனது அம்மாவிடம் கொடுத்து படிக்கத்தெரியாது எனது அம்மாவிடம் கையொப்பத்தை பெற்று பத்திரத்தை ஏற்படுத்தியுள்ளார் அதனால் வழக்கு தாக்கல் செய்தேன். எனது அம்மாவின் அறிவுரையின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை நான் தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் படித்து பார்த்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்குச்சொத்தை எனது சகோதரி சாரதா என்பவர் 4 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது தாயாரை ஏமாற்றி வழக்குச்சொத்தை 4 ம் பிரதிவாதி எழுதி வாங்கியதாக நான் சாட்சியம் அளித்திருப்பது பொய் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு பின்பு எனக்கும் எனது தாயாருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. வருடத்திற்கு எத்தனை முறை எனது தாயாரை பார்ப்பேன் என்றால் எனது சௌகரியத்திற்கு ஏற்றார்போல் நான் பார்ப்பேன். வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ 1 ஆகிய பாகப்பிரிவினை ஆவணங்கள் எழுதப்பட்ட அன்றே நடைமுறைக்கு வந்தது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஆவணங்களில்

எனக்கு பங்கு ஒதுக்கப்படவில்லை என்பதை தெரிந்தும் நான் அதனை எதிர்த்து எந்த விதமான நடவடிக்கையும் தற்போதுவரை எடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களும் எனது குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைப்படி ஏற்படுத்தப்பட்டதால் அதனை எதிர்த்து நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி எனது தாயாருக்கு வழக்குச்சொத்து உரிமைப்பட்டது என்றாலும் அதனை எனது தாயார் எனது சகோதரிக்கு வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி செட்டில்மெண்ட் ஏற்பாடு செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணப்படி எனது சகோதரிக்கு உரிமைப்பட்ட சொத்தை எனது சகோதரியிடம் இருந்து 4ம் பிரதிவாதி வழக்குச்சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தில் எனது குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைகளின் பெயரில் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் கடுமையான செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.